நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னூர்.

**முன்னிலை: – திருமதி. R. கீதா, பி.ஏ, பி.எல்.,**
**விரைவு நீதித்துறை நடுவர், குன்னூர்.**
**(FAC) நீதித்துறை நடுவர், குன்னூர்.**

2026 - ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 சோபகிருது வருடம் வைகாசி 29 – ஆம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.116/2023**
**CNR.No.TNNS050008412023**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசுதரப்பில் காவல் உதவி ஆய்வாளர்,<br>குன்னூர் நகர காவல்நிலையம்,<br>**குற்ற எண்.48/2023.** |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | – | A1 – விஜயகாந்த், (வயது – 38 (1985)),<br>த/பெ. முத்துகிருஷ்ணன்,<br>க.எண். 5/1139, ஸ்டேன்லி பார்க்,<br>ஓட்டுப்பட்டறை, குன்னூர்.<br><br>A2 – ஶ்ரீகாந்த், (வயது – 41 (1982)),<br>த/பெ. முத்துகிருஷ்ணன்,<br>க.எண். 5/1139, ஸ்டேன்லி பார்க்,<br>ஓட்டுப்பட்டறை, குன்னூர். |
| வனையப்பட்ட குற்றம் | – | A1 – U/s. 287, 338 of IPC.<br>A2 – U/s. 506(i) of IPC. |
| தண்டிக்கப்பட்ட குற்றம் | – | இல்லை. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 12.02.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 16.03.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | A1 & A2 – 16.03.2023 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | A1 – 21.03.2023 (As per the order of this court in CMP.No.1057/2023, dated.21.03.2023)<br><br>A2 – 21.03.2023 (As per the order of this court in CMP.No.1058/2023, dated.21.03.2023) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 01.07.2023 |
| குவிமுச.பிரிவு.240–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 05.08.2023 |

| | | |
|---|---|---|
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | – | முதல்விசாரணை / குறுக்குவிசாரணை:<br>PW.1 – 16.11.2023 / 16.11.2023<br>PW.2 – 21.11.2023 / 21.11.2023<br>PW.3 – 5.12.2023 / --<br>PW.4 – 05.12.2023 / --<br>PW.5 – 12.12.2023 / 07.10.2024<br>PW.6 – 22.01.2024 / --<br>PW.7 – 12.02.2024 / 12.02.2024<br>PW.8 – 12.08.2025 / 12.08.2025<br>PW.9 – 12.08.2025 / 04.11.2025<br>PW.10 – 18.09.2025 / 18.09.2025 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | – | 18.09.2025 |
| குவிமுச.பிரிவு.311–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | – | -Nil- |
| குவிமுச.பிரிவு.313(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 24.09.2025 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | – | -Nil- |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | – | -Nil- |
| தீர்மானம் | – | 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள்.287, 338 – இன் படியும், 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.506(i) – இன் படியான குற்றச்சாட்டுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| முடிவு | – | **இறுதியாக,** 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள்.287, 338, 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.506(i) – இன் கீழான குற்றம் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகள் மேற்படியான குற்றங்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு. 248(1) – இன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் **பி.ஆர்**.191/2023 - இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள கட்டிங் மெஷின் |

| | | |
|---|---|---|
| | | ஒன்று **அ.சா.பொ.1** ஆகவும், குருந்தகடு ஒன்று **அ.சா.பொ.2** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.பொ.1 வழக்குச்சொத்து நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை அதன் உரிமையாளர் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும். தவறும்பட்சத்தில் அரசுடமையாக்கப்படும். அ.சா.பொ.2 நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும், மேலும் மேல்முறையீடு ஏதேனுமிருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரி ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 01.07.2023 – ஆம் தேதியன்று 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள்.287, 338, 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.506(i) – இன் கீழ் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 01.06.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–I திரு. R. தங்கராஜ், பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. தினேஷ்குமார், எம்.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை விசாரணை செய்தும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

### 1. குன்னூர்நகர காவல்நிலைய உதவி ஆய்வாளர் கு.வி.மு.ச.பிரிவு.173 – இன் கீழ் எதிரிகளின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையின் விவரம் :–

(i) கடந்த 12.02.2023 – ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு குன்னூர்நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கரடிப்பள்ளம் பாலசுப்ரமணியம் என்பவரது

பங்களாவில் 1 – ஆம் எதிரியின் கான்ட்ராக்டில் வேலை செய்யும் அ.சா.1 – க்கு வேலை செய்வதற்கு தேவையான போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பான உபகரணமும் கொடுக்காமல் கவனக்குறைவாக வேலை வாங்கிய குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 287 of IPC – இன் படியும், பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 – ஆம் எதிரி அ.சா.1 – க்கு வேலை செய்வதற்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாமலும் பாதுகாப்பான உபகரணமும் கொடுக்காமல் கவனக்குறைவாக வேலை வாங்கியதால் வெல்டிங் கட்டர் மெஷின் அ.சா.1 – இன் இடது கை மணிக்கட்டுக்கு மேல் வெட்டி அ.சா.1 – க்கு இடது கை மணிக்கட்டுக்கு மேல் ஆழமான சிதைந்தகாயம் (தசைநார் காயம்) எனும் கொடுங்காயம் ஏற்பட காரணமாக இருந்த குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு.338 of IPC – இன் படியும்,

(ii) பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, மேற்படி சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் அ.சா.1 – இன் மருத்துவ சிகிச்சைக்கு எந்தவொரு இழப்பீடும் தராமல் இருந்து கொண்டு மருத்துவ சிகிச்சைக்கு இழப்பீடு கேட்ட அ.சா.1 – ஐ 2 – ஆம் எதிரி பணம் கேட்டால் உன்னை கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 2 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 506(1) of IPC – வின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாகவும் குன்னூர்நகர காவல்நிலைய உதவி ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** 1, 2 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி நீதிமன்றத்தில் ஆஜரானபின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு.207 வலியுறுத்துவது போல இலவசமாக எதிரிக்கு வழங்கப்பட்டு, சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள்.287, 338, 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.506(i) – இன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து குற்றம் குறித்து விளக்கிக்கூறி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசுதரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.10** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.10** வரையான சான்றாவணங்களும், **அ.சா.பொ.1** மற்றும் **அ.சா.பொ.2** வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் 1 – ஆம் எதிரி **எ.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு, **எ.சா.ஆ.1** மற்றும் **எ.சா.ஆ.2** வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக புலப்படும் வழக்கின் சுருக்கம் :–**

**4.1.** **அ.சா.9** திரு. மகேந்திரன், உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், கடந்த 16.03.2023 – ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான **அ.சா.ஆ.1** புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.48/2023, இ.த.ச.பிரிவுகள்.287, 337, 506(1) – இன் கீழ் **அ.சா.ஆ.5** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையுடன் புகார் மனுவினை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. தினகரன் அவர்கள் பார்வைக்கு வைத்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

**4.2.** அ.சா.10 சாட்சி தனது சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் திரு. மகேந்திரன் அவர்கள் தனது பார்வைக்கு வைத்த வழக்குக்கோப்பினை அன்றையதினமே தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 11.15 மணிக்கு வழக்கின் சம்பவஇடமான கரடிப்பள்ளத்திலுள்ள பாலசுப்பிரமணியனம் பங்களாவிற்கு சென்று சாட்சிகள் அ.சா.3 ராதாகிருஷ்ணன், அ.சா.4 மோகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு அ.சா.3 சாட்சியிடம் **அ.சா.ஆ.2** கையொப்பம் மற்றும் அ.சா.4 சாட்சியிடம் **அ.சா.ஆ.3** கையொப்பங்களை பெற்று **அ.சா.ஆ.6** பார்வை மகசர் மற்றும் **அ.சா.ஆ.7** மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னிட்டு சாட்சிகள்

சல்மான் (அ.சா.1), பாலாஜி (அ.சா.7), சுகந்த் சுகுமாறன் (அ.சா.6), பாலசுப்பிரமணியன் (அ.சா.5), ராதாகிருஷ்ணன் (அ.சா.3), மோகன் (அ.சா.4) ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக விசாரித்து வாக்குமுலம் பதிவுசெய்ததாகவும்,

**4.3.** பின்னிட்டு தனது முதற்கட்ட விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரிகளை தேடிவந்தபோது அன்றையதினம் 13.30 மணிக்கு ஓட்டுப்பட்டறை பஸ் நிறுத்தம் அருகே வைத்து 1, 2 எதிரிகளை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தகுந்த வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் அன்றையதினம் மதியம் 12.45 மணிக்கு அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த கருப்பு பச்சை கைப்பிடி போட்ட கிளாசிக் என்று எழுதப்பட்ட பல் சக்கரத்துடன் கூடிய **அ.சா.பொ.1** கட்டிங்மெஷின் ஒன்றை **அ.சா.ஆ.8** படிவம் – 91 தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னிட்டு 23.04.2023 – ஆம் தேதி அ.சா.1 – க்கு சிகிச்சையளித்த குன்னூர் அரசு மருத்துவமனை மருத்துவர் லலித் ஜெகத் அவர்களை விசாரித்து வாக்குமூலம் செய்து **அ.சா.ஆ.4** காயச்சான்று பெற்று வழக்குக் கோப்புடன் சேர்த்ததாகவும், அ.சா.ஆ.4 காயச்சான்றிதழில் அ.சா.1 – க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச.பிரிவுகள்.287, 338 மற்றும் 506(1) ஆக மாற்றம் செய்து **அ.சா.ஆ.9** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததாகவும்,

**4.4**. பின்னிட்டு அன்றையதினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.9 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மகேந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 23.04.2023 – ஆம் தேதி அ.சா.1 நிலையம் ஆஜராகி 2 – ஆம் எதிரி ஸ்ரீகாந்த் தன்னை போனில் அழைத்து மிரட்டிய ஆடியோ பதிவு அடங்கிய **அ.சா.பொ.2** குருந்தகடு ஒன்றை **அ.சா.ஆ.10** 65(பி) சான்றிதழுடன் ஆஜர் செய்ததை பெற்று வழக்குக்கோப்புடன் சேர்த்ததாகவும், பின்னிட்டு அ.சா.1 – ஐ விசாரித்து மறுவாக்குமூலம் பதிவுசெய்து தனது புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவரவே புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள்.287, 338, 506(1) – இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல்

செய்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்குப் பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ) பிரிவின் படி விசாரணை செய்த போது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் 1 – ஆம் எதிரி எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் 1 – ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.287, 338, 2 – ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவு.506(i) – இன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

<u>பிரச்சனை:–</u>

கடந்த 12.02.2023 – ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு குன்னூர்நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கரடிப்பள்ளம் பாலசுப்ரமணியம் என்பவரது பங்களாவில் 1 – ஆம் எதிரியின் கான்ட்ராக்டில் வேலை செய்யும் அ.சா.1 – க்கு வேலை செய்வதற்கு தேவையான போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பான உபகரணமும் கொடுக்காமல் கவனக்குறைவாக வேலை வாங்கியதால் வெல்டிங் கட்டர் மெஷின் அ.சா.1 – இன் இடது கை மணிக்கட்டுக்கு மேல் வெட்டி ஆழமான சிதைந்தகாயம் (தசைநார் காயம்) எனும் கொடுங்காயம் ஏற்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு இழப்பீடு கேட்ட அ.சா.1 – ஐ 2 – ஆம் எதிரி பணம் கேட்டால் உன்னை கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு. 287, 338, 506(1) of IPC – வின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாகவும் குன்னூர்நகர காவல்நிலைய உதவி ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>7 தீர்வு:-</u>

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**8.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது **அ.சா.**1 முதல் **அ.சா.**10 வரையிலான சாட்சியங்கள் மூலமாகவும், **அ.சா.ஆ.**1 முதல் **அ.சா.ஆ.**10 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், **அ.சா.பொ.**1 மற்றும் **அ.சா.பொ.**2 சான்றுப்பொருட்களின் மூலமாகவும் அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கூறி வாதிட்டார்.

**9.** கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தமது வாதத்தின் போது, சம்பவத்தின் போது அ.சா.1 எதிரிகள் கான்ட்ராக்ட் எடுத்த பங்களாவில் வேலை செய்யவில்லை என்றும், அ.சா.1 – உடன் சம்பவசமயத்தில் பணிபுரிந்ததாக கூறப்படும் அ.சா.7 அவரது சாட்சியத்தில், தானும் அ.சா.1 – ம் கரப்பள்ளத்திலுளள ரப்பர் பேக்டரியின் வலதுபுறமுள்ள ஒரு பேக்டரியில் வேலை செய்து கொண்டிருந்தபோது மெஷின் பட்டு அடிபட்டதாக சாட்சியமளித்திலுள்ளதிலிருந்து அ.சா.1 சம்பவசமயத்தில் எதிரிகளுக்கு கீழ் பணிபுரியவில்லை என்பது நிரூபணம் ஆவதாகவும், சம்பவம் நடந்த கிழமை ஞாயிற்றுக்கிழமை என்பதால் எதிரிகள் பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்களது பணியாளர்களுக்கு விடுமுறை விடும் வழக்கத்தை கடைபிடித்து வருவதால் எதிரிகளுக்கு கீழ் அ.சா.1 பணிபுரியும் பொழுது விபத்து ஏற்படவில்லை என்றும், சம்பவ சமயத்தில் 1 – ஆம் எதிரி சென்னையில் இருந்தார் என்பது எ.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் நிரூபணம் ஆவதாகவும், மேலும் அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் 2 – ஆம் எதிரி கொலை மிரட்டல் விடுத்தார் என்பது குறித்து முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், அதனால் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று வாதிட்டார்.

**10.** அரசு தரப்பில் 1 – ஆம் எதிரி கரடிப்பளத்ளத்தில் பாலசுப்ரமணியன் என்பவரது பங்களாவில் புதுபித்தல் வேலையை காண்ட்ராக்ட் எடுத்திருந்ததாகவும், 12.02.2023 – ஆம் தேதியில் 1 – ஆம் எதிரியின் கீழ் பணிபுரிந்தபோது வாதிக்கு 1 – ஆம் எதிரி தேவையான போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துகொடுக்காமல் பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்காமலும் கவனக்குறைவாக வேலைவாங்கியதில் வாதிக்கு

வெல்டிங் கட்டர் மெஷின் இடது கை மணிக்கட்டுக்குமேல் வெட்டி வாதிக்கு கொடுங்காயம் ஏற்பட காரணமாக இருந்தகுற்றம் புரிந்துள்ளார் என்று 1 – ஆம் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

**11.** மேற்படி அரசு தரப்பில் கூறுவது போல் 1 – ஆம் எதிரி இ.த.ச.பிரிவு.287 மற்றும் 338 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளாரா என பரிசீலனை செய்கையில் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், வாதி 12.02.2023 – ஆம் தேதியில் 1 – ஆம் எதிரிக்கு கீழ் 1 – ஆம் எதிரி கான்ட்ராக்ட் எடுத்த பங்களாவில் பணிபுரியவில்லை என வாதிட்டிருந்தாலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் குறுக்கு விசாரணை சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அதில் 1 – ஆம் எதிரி தரப்பில் சம்பவ தினத்தன்று வாதி அவருக்கு கீழ் பணிபுரிவில்லை என எதிர்வாதம் எடுக்கவில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் 1 – ஆம் எதிரி அவரை எ.சா.1 ஆக 17.11.2025 மற்றும் 22.05.2026 – ஆகிய இரண்டு தேதிகளில் விசாரணை செய்துகொண்டுள்ளது தெரியவருகின்றது. அவரது சாட்சியத்தில் அவரது கட்டுமான நிறுவனத்திற்கு கீழ் பணிபுரியும் அனைத்து தொழிலாளருக்கும் போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குவதாக சாட்சியமளித்திருந்தாலும் சம்பவ சமயத்தில் அ.சா.1 தன்னிடம் பணிபுரியவில்லை என மறுக்கவில்லை என்பது தெரியவருகின்றது.

**12.** மேலும் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தின் உரிமையாளர் அ.சா.5 அவரது சாட்சியத்தில், அவரது பங்களாவை புதுப்பிப்பதற்காக எதிரிகளுக்கு கான்ட்ராக்ட் அடிப்படையில் பங்களாவை கொடுத்திருந்ததாகவும், 12.02.2023 – ஆம் தேதி தனது பங்களாவில் புதுப்பித்தல் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அங்கு பணி செய்யும் ஒரு தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள் என சாட்சியமளித்துள்ளதை பரிசீலனை செய்கையில், சம்பவம் நடைபெற்றது எதிரி கான்ட்ராக்ட் எடுத்த பங்களாவில் தான் என்பதும், வாதிக்கு காயமேற்படும் பொழுது அவர் 1 – ஆம் எதிரிக்கு கீழ் தான் பணிபுரிந்துள்ளார் என்பது நிரூபணம் ஆவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. இவ்வழக்கில் வாதியின் புகார்மனுவை பரிசீலனை செய்கையில், அவர் சம்பவதினத்தன்று 04.30 மணியளவில் வெல்டிங் கட்டிங் வேலை

செய்துகொண்டிருக்கும் போது அவரது மணிக்கட்டில் வெல்டிங்கட்டர் மிஷின் கையில் பட்டு கை நரம்பு துண்டாகி விட்டதாக குறிப்பிட்டுள்ளது தெரியவருகின்றது.

**13.** ஒருவர் மீது இ.த.ச.பிரிவுகள்.287, 338 – இன் கீழ் குற்றப்பொறுப்பு சுமத்தவேண்டுமானால் எதிரியானவருக்கு அந்த இயந்திரம் உரிமையானதாக இருந்து அல்லது அவரது உடைமையில் அந்த இயந்திரம் இருந்து அந்த இயந்திரத்தை பாதுகாப்பான முறையில் இயக்காமல் கவனக்குறைவாக இயக்கியும் மனித உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை தடுப்பதற்கான போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் அந்த இயத்திரத்தை இயக்கியும் மற்றவர்களுக்கு கொடுங்காயம் ஏற்படுத்தியிருந்தால் அவர் மேற்படி பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார்.

**14.** இ.த.ச.பிரிவு.287 – இன் கீழ் ஒருவருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்த வேண்டுமானால் அவரது உடைமையில் உள்ள இயந்திரத்தை அவர் பாதுகாப்பற்ற முறையிலும், கவனக்குறைவான முறையிலும் இயக்கியிருக்கவேண்டும். எனவே இந்த வழக்கில் 1 – ஆம் எதிரி மீது மேற்படி பிரிவின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தவேண்டுமென்றால் வாதிக்கு ஏற்பட்ட காயமானது 1 – ஆம் எதிரியின் வசம் உள்ள இயந்திரத்தை 1 – ஆம் எதிரி பாதுகாப்பற்ற முறையிலும், கவனமற்ற முறையிலும் இயக்கியிருக்க வேண்டும். இவ்வாறு வாதிக்கு காயமேற்படுத்தியதாக கூறும் கட்டர் மிஷினின் உரிமையாளர் மற்றும் சம்பவ சமயத்தில் அதை இயக்கியவர் குறித்து வாதி கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது.

> **" பத்தி – 2 விபத்து ஏற்படுத்திய மிஷினை எப்போது போலிசாரிடம் கொடுத்தேன் என்றால் புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை மிஷினை தாக்கல் செய்ய சொன்னதால் பின்னிட்டு கொடுத்தேன். மேற்கண்ட அ.சா.பொ1 – ஐ நான் ஊட்டியில் உள்ள ஒரு கடையில் வாங்கினேன். எதிரிகள் வேலைக்காக வரும்போது அந்த மிஷினையும் கொண்டு வரச்சொன்னதால் கொண்டுவந்தேன்."**

**15.** மேற்படி அ.சா.1 – இன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.1/வாதி காயமேற்படுத்திய இயந்திரமானது வாதியின் உடைமையில் உள்ளதும் அவரே அந்த இயந்திரத்தை இயக்கும் பொழுது அவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதும் தெரியவருகின்றது. பொதுவாக கட்டர் மிஷின் போன்ற இயந்திரங்களை இயக்கும் பொழுது அதை இயக்குபவர் தான் மிகுந்த கவனத்துடனும் பாதுகாப்புடனும் இயக்க வேண்டும். அ.சா.பொ.1 இயந்திரமானது இயந்திரத்தின் உரிமையாளர் வாதியே என்பதாலும் அதை சம்பவ சமயத்தில் இயக்கியவரும் வாதியே என்பதாலும் அதை பாதுகாப்பான முறையிலும், கவனமுடனும் இயக்கும் பொறுப்பு வாதிக்கே உள்ளது. எனவே 1 – ஆம் எதிரியின் கீழ் அவர் பணிபுரிகிறார் என்ற காரணத்தினாலேயே 1 – ஆம் எதிரி மீது மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தஇயலாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே வாதி அவரது இயந்திரத்தை கவனமின்றி இயக்கியதால் அவருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்காக 1 – ஆம் எதிரியின் மீது இத.ச.பிரிவுகள்.287 மற்றும் 338 – இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தஇயலாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**16.** அடுத்ததாக, கடந்த 12.02.2023 – ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு கரடிப்பள்ளத்திலுள்ள பாலசுப்ரமணியன் என்பவரது பங்களாவில் பணிபுரியும் போது வாதிக்கு வெல்டிங் கட்டர் மெஷினால் ஏற்பட்ட காயத்திற்கு ஒரு மாதத்திற்கு மேலாகியும் மருத்துவ செலவுக்கு எந்தவொரு இழப்பீடும் 1 – ஆம் எதிரி தராததால் மருத்துவ சிகிச்சைக்கு இழப்பீடு கேட்ட வாதியை 2 – ஆம் எதிரி பணம் கேட்டால் உன்னை கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக 2 – ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவு.506(1) – இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது தெரியவருகின்றது. இதுகுறித்து வாதி அவரது புகார் வாக்குமூலத்தில் 1, 2 எதிரிகள் இருவரும் நேரிலும் தொலைபேசியிலும் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ளது தெரியவருகின்றது. இது குறித்து வாதி அவரது சாட்சியத்திலும் எதிரிகள் இருவருமே தன்னை வண்டி ஏற்றி கொன்றுவிடுவதாக கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. ஆனால், எந்த இடத்தில், எந்த தேதியில் 2 – ஆம் எதிரி தனக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என வாதி தரப்பில் அவரது புகார் மற்றும் சாட்சியத்தில் கூறவில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் அ.சா.10 புலன்

விசாரணை அதிகாரி அவரது சாட்சியத்தில் 23.04.2023 – ஆம் தேதி அ.சா.1 தன்னிடம் 2 – ஆம் எதிரி ஸ்ரீகாந்த் தன்னை போனில் அழைத்து மிரட்டிய ஆடியோ பதிவு அடங்கிய கருந்தகடு ஒன்றை 65(பி) சான்றிதழுடன் தன்னிடம் ஆஜர் செய்ததாக கூறி அந்த குருந்தகட்டை அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்துள்ளது தெரியவருகின்றது.

**17.** மேற்படி அ.சா.பொ.2 – இல் உள்ள பதிவுகளை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்தபோது அதில் சில புகைப்படங்களும், 21 ஆடியோ பதிவும் இருந்துள்ளது தெரியவருகின்றது. அதில் உள்ள பதிவை இந்நீதிமன்ற கணிணி மூலம் கேட்டு பரிசீலனை செய்ததில் எந்த பதிவில் யார் பேசுகிறார்கள் என இந்நீதிமன்றத்திற்கு குரல் அடையாளம் கண்டுகொள்ளும் வகையில் தெளிவாக இல்லை என தெரியவருகின்றது. மேலும் அ.சா.பொ.2 – இல் உள்ள பதிவுகளில் வாதிக்கு கொலை மிரட்டல் செய்ததாக எந்த பதிவுகளும் இல்லை என்பதை அறியமுடிகின்றது. மேலும் அந்த 21 ஆடியோ பதிவில் 2 – ஆம் எதிரி எந்த பதிவில் பேசினார் என்பது குறித்த அடையாளத்தை அரசு தரப்பு இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், 2 – ஆம் எதிரியின் குரல் தான் அந்த பதிவில் உள்ளது என்பதை அரசு தரப்பு எந்த சாதனத்தில் அந்த ஆடியோ பதிவு செய்யப்பட்டதோ அந்த செல்போன் சாதனத்தை கைப்பற்றி அதை இந்நீதிமன்றத்தின் மூலம் தடயவியல் துறைக்கு அனுப்பி 2 – ஆம் எதிரியின் குரலை உறுதிசெய்ததாக எந்த அறிக்கையும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்பது தெரியவருகின்றது.

**18.** மேலும் இவ்வாறு 2 – ஆம் எதிரி தன்னை தொலைபேசியில் அழைத்து மிரட்டியதாகவும், அதைத்தான் தனது கைப்பேசியில் பதிவு செய்ததாகவும் வாதியே அவரது சாட்சியத்தில் கூறி சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. இந்நிலையில் அ.சா.பொ.2 – இல் பல நபர்கள் பேசியுள்ள பல குரல்களின் பதிவுகள் உள்ள நிலையில் மேற்படி சான்றுப்பொருளிலில் உள்ள பதிவுகளை ஆதாரமாகக்கொண்டு 2 – ஆம் எதிரி மீது எந்த குற்றச்சாட்டும் சுமத்தஇயலாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் அ.சா.ஆ.1 புகாரிலும், அ.சா.1 – இன் சாட்சியதிலும் எதிரிகள் தன்னை மிரட்டியதாக கூறியிருந்தாலும் அதனால் தனக்கு மரணபயம் ஏற்பட்டதாக கூறவில்லை என்பதால் 2 – ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவு.506(1)

– இன் கீழ் குற்றப்பொறுப்பு சுமத்த இயலாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**19.** மேற்கண்ட ஆய்விலிருந்து அரசு தரப்பானது 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள்.287, 338, 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.506(i) – இன் படியான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க தவறிவிட்டது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்குமென்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**<u>20. முடிவு:–</u>**

**இறுதியாக,** 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள்.287, 338, 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.506(i) – இன் கீழான குற்றம் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகளை மேற்படியான குற்றங்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு.248(1)–இன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**21. <u>சான்று பொருட்களின் மீதான உத்தரவு:–</u>**

இவ்வழக்கில் **பி.ஆர்.**191/2023 - இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள கட்டிங் மெஷின் ஒன்று **அ.சா.பொ.1** ஆகவும், குருந்தகடு ஒன்று **அ.சா.பொ.2** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.பொ.1 வழக்குச்சொத்து நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை அதன் உரிமையாளர் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும். தவறும்பட்சத்தில் அரசுடமையாக்கப்படும். அ.சா.பொ.2 நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும், மேலும் மேல்முறையீடு ஏதேனுமிருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 – ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

//ஒம்.//திருமதி. R.கீதா,
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.

**பின்சேர்க்கை :–**
**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| Persecution Witnesses No. | Name of the Witnesses | Description |
|---|---|---|
| PW.1 | திரு. சல்மான். | புகார்தாரர். |
| PW.2 | திருமதி. இஷா. | செவியுறு சாட்சி. |
| PW.3 | திரு. ராதாகிருஷ்ணன். | மகசர் சாட்சி. |
| PW.4 | திரு. மோகன். | மகசர் சாட்சி. |
| PW.5 | திரு. பாலசுப்ரமணியன். | செவியுறு சாட்சி. |
| PW.6 | திரு. சுகந்த் சுகுமாறன். | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. |
| PW.7 | திரு. பாலாஜி. | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. |
| PW.8 | டாக்டர். ரமேஷ், அரசு மருத்துவமனை, குன்னூர். | மருத்துவர். |
| PW.9 | திரு. மகேந்திரன், உதவி ஆய்வாளர், குன்னூர் நகர காவல் நிலையம். | முதல் புலன் விசாரணை அதிகாரி. |
| PW.10 | திரு. தினகரன், உதவி ஆய்வாளர் (ஓய்வு), குன்னூர் நகர காவல் நிலையம் | மேல் புலன் விசாரணை அதிகாரி. |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :–**

| *Exhibits No.* | *Date* | *Description of Exhibits* | *Proved by/ Attested by* |
|---|---|---|---|
| Ex.P.1 | 16.03.2023 | புகார் மனு. | அ.சா.1. |
| Ex.P.2 | 16.03.2023 | பார்வை மகசரிலுள்ள அ.சா.3 – இன் கையொப்பம் மட்டும். | அ.சா.3. |
| Ex.P.3 | 16.03.2023 | பார்வை மகசரிலுள்ள அ.சா.4 – இன் கையொப்பம் மட்டும். | அ.சா.4. |
| Ex.P.4 | 12.02.2023 | காயச்சான்று. | அ.சா.8. |
| Ex.P.5 | 16.03.2023 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.9. |
| Ex.P.6 | 16.03.2023 | பார்வை மகசர். | அ.சா.10. |
| Ex.P.7 | 16.03.2023 | மாதிரி வரைபடம். | அ.சா.10. |
| Ex.P.8 | 16.03.2023 | படிவம் – 91. | அ.சா.10. |
| Ex.P.9 | 23.04.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.10. |
| Ex.P.10 | 23.04.2023 | 65(பி) சான்றிதழ். | அ.சா.10. |

**அரசுதரப்பு சான்றுபொருள் :–**

| *Mo's.* | *Description of Material Object* | *Proved by/ Attested by* |
|---|---|---|
| அ.சா.பொ.1 | கட்டிங் மெஷின். | அ.சா.1. |
| அ.சா.பொ.2. | குருந்தகடு. | அ.சா.10 |

**எதிரிகள் தரப்பு சாட்சி** :–

திரு. விஜயகாந்த் – 1 – ஆம் எதிரி

**எதிரி தரப்பு சான்றுபொருட்கள்** :–

| *Mo's.* | *Description of Material Object* | *Proved by/ Attested by* |
|---|---|---|
| எ.சா.பொ.1 | Center for Aerospace Research Center வழங்கிய சான்று அசல். | எ.சா.1. |
| எ.சா.பொ.2. | பல்வேறு தேதியிட்ட இரசீதுகள் (5 எண்ணிக்கைகள்). | எ.சா.1 |

**<u>குறிப்பு:–</u>**

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

//ஒம்.//திருமதி. R.கீதா,
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.

//உண்மை நகல்//

//ஒம்.//திருமதி. R.கீதா,
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.